

தஞ்சையில் தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறை, மண்டலக் கலை பண்பாட்டு மையம், சார்பில் பொங்கல் பண்டிகையினையொட்டி, சென்னையில் நடைபெறும் “சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா” நடத்தப்படுவது போன்று ஏனைய அரசு துறைகளுடன் இணைந்து பொங்கல் கலை விழா உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் தொடங்கி வைத்து பங்குபெற்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் உள்ளார்.



திருப்பூர் மாவட்டம், திருமுருகன்பூண்டி நகராட்சி, இராக்கியாபாளையம் சாலையில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலக கட்டடத்தினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ராஜாராம், திருமுருகன்பூண்டி நகர்மன்றத் தலைவர் குமார், ஆணையார் (பொ) பால்ராஜ், வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், நகர கழக செயலாளர் கிருஷ்ணகுமார் உள்பட கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

# தஞ்சை மண்டல தி.மு.க. மகளிர் மாநாட்டிற்கு பெரும் அளவில் மகளிரை கலந்து கொள்ள செய்வோம்!

## மயிலாடுதுறை மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ., அறிவிப்பு!

மயிலாடுதுறை, ஜன 23-

மயிலாடுதுறை மாவட்டதி.மு.க. செயற்குழு கூட்டம் கூட்டம் மயிலாடுதுறையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.ஜி. சீனிவாசன் தலைமை தாங்கினார். கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானம் குறித்து மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் பேசினார். கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட பொறுப்பு அமைச்சரும்,

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர்கள், பி.எம்.ஸ்ரீதர், விவசாய தொழிலாளர் அணி மாநில இணைச் செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் வை.சௌமியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்திய சீலன், எம்.எம்.சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம இளங்கோவன், முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, கண்ணகி பன்னீர், பொருளார்

மகா.அலெக்சாண்டர், சீர்காழி நகர கழக செயலாளர் ம.சுப்பராயன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மூவலூர் எம்.மூர்த்தி, என். இளையபெருமாள், பி.முருகமணி, மங்கை எம்.சங்கர், செல்லசேது.ரவிக்குமார், பி.எம்.அன்பழகன், எம். அப்துல்மாலிக், ஏ.ஆர். ராஜா, அமிர்த.விஜயகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சு. குமார், மலர்விழிதிருமாவளவன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.சம்சுதீன், என்.அண்ணாதுரை, எஸ். கே.முத்துராஜா, எம்.அன்புச்செழியன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

தஞ்சாவூரில் வரும் 26.01.2026 அன்று டெல்டா மண்டல ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ தஞ்சை மண்டல மகளிர் மாநாடு தஞ்சையில் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலிருந்து அதிகளவில் மகளிர் கலந்து கொள்ள செய்வது எனவும், மாநாட்டில் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி மற்றும் மகளிர்களை கலந்து கொள்ள செய்வதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர,பேரூர் செயலாளர்கள் மற்றும் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஏற்பாடுகளை செய்து தர வேண்டும் என்றும் கலந்து கொள்ளும் மகளிர்கள் குறித்த பட்டியலை மாவட்ட கழகத்திடம் வழங்கிட வேண்டும் என்றும்,

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, கட்டணமில்லா விடியல் பேருந்து பயணம், தோழி விடுதிகள், புதுமைப்பெண் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்கள் என எண்ணற்ற மகளிர் மேம்பாட்டுத்திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழ்நாட்டுப் பெண்களை உலகளவில் ‘வெல்லும் தமிழ்ப்பெண்களாக’ மாற்றியுள்ள கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் 2026 சட்டமன்றத் தேர்தலில் வென்று திராவிட மாடல் 2.0 அமைந்திடும் வகையில், நமது திராவிட மாடல் அரசு பெண்களுக்குச் செய்துள்ள சாதனைத் திட்டங்களைப் பெண்களிடம் எடுத்துக்கூறி மகளிரின் முழுமையான ஆதரவு கழகத்திற்கு மட்டுமே என்ற நிலையை உறுதி செய்திட வேண்டும் எனவும் இந்த பணியை

பிப்ரவரி 1ஆம் தேதி தொடங்கி மார்ச் 8ஆம் தேதி வரைக்கும் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் 10 மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் மூலம் அந்தந்த வாக்குச்சாவடிகளுக்குட்பட்ட வீடுகளில் வீடு, வீடாகப் பரப்புரை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், அதுபோது கழக அரசின் மகளிர் நலத்திட்டங்களை எடுத்துக்கூறியும், சாதனைத் திட்டங்களின் துண்டு பிரசுரங்கள் வழங்கியும் மக்களிடம் கழகத்திற்கான ஆதரவைத் திரட்டிட வேண்டும் எனவும், இந்தப் பரப்புரை மூலம் பெண்கள் வாக்கு சிந்தாமல் சிதறாமல் முழுமையாக கழத்திற்கு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும்

பிப்ரவரி1 முதல் பிப்ரவரி28 வரை தமிழ்நாடு முழுவதும் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரையை மேற்கொள்ளும் வகையில் நட்சத்திரப் பரப்புரையாளர்களைத் கொண்டு மயிலாடுதுறை சீர்காழி பூம்புகார் ஆகிய சட்டமன்றத் தொகுதியிலும் தெருமுனை கூட்டங்கள் அல்லது அரங்கக் கூட்டங்களாக நடத்தி பரப்புரை செய்வதுடன், தலைகுனியாது’ பரப்புரையை வெற்றியடையச் செய்திடுவது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



மன்னார்குடி நகரத்தில் பல்வேறு நற்பணிகளை மேற்கொண்டுவரும் “வான்புகழ் வள்ளுவன் நற்பணி மன்றம்” சார்பாக நடைபெற்ற ஆண்டுவிழா நிகழ்ச்சியில் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். நகரமன்ற தலைவர் மன்னை.த. சோழராஜன், பகுத்தறிவாளர் கழக மாவட்ட தலைவர் கௌதமன்,நகர மன்ற உறுப்பினர் சா.புகழ், வர்த்தகர் சங்க தலைவர் ஆர்.வி.ஆனந்த், மற்றும் மன்ற நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரியில் இந்தி ஆதிக்கத்தை வேரறுக்க எழுந்த

# மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மருத்துவர் கலாநிதி வீராசாமி எம்.பி.–எஸ்.கே.பி.கருணாநிதி எழுச்சி உரை– மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ.–ஓய் பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிக்கை!





கிருஷ்ணகிரி, ஜன.23-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நமக்குக் கற்பித்துச் சென்ற ஐம்பெரும் கொள்கை முழக்கங்களில் முதன்மையானது “இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்” என்ற முழக்கம் நம் உயிரில் கலந்தது, உணர்வில் பதிந்தது.

1930களிலும் 1965லும் இந்தியின் ஆதிக்க அலைக்கு எதிராகத் தமிழ்நாட்டைத் தற்காத்தது திராவிட இயக்கம். தந்தை பெரியார் ஊட்டிய இனஉணர்வும், பேரறிஞர் அண்ணா நமக்களித்த “இருமொழிக் கொள்கை”

எனும் எஃகு அரணும், ‘தாழப் பறக்காது எங்கள் தமிழ்க்கொடி’ என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உயர்த்திப் பிடித்த கொள்கை முன்னெடுப்புகளும் டெல்லி அதிகார மையங்களின் நகங்கள் கூட தமிழ்நாட்டைத் தொட்டுப் பார்க்க முடியாது என்ற நிலையை உருவாக்கியது.

பேரறிஞர் அண்ணா தந்த இருமொழிக் கொள்கையால் இன்று தமிழ்நாடு அடைந்திருக்கும் உயரம் உலகறிந்தது. ‘தமிழருக்கு அவர் தாய்மொழி உலகத்தோடு உறவாட ஆங்கிலம்’ என நம்முடைய இருமொழிக் கொள்கையால் இந்திய மாநிலங்களுக்கே வழிகாட்டியாகத் திகழ்கிறது தமிழ்நாடு. நம்முடைய புறநானூற்றுப் படைத் தலைமைகளின் வழித் தோன்றலாக, வரலாற்றின் தொடர்ச்சியாக, நம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள், இந்தித் திணிப்பு எனும் கோரைப் பற்களுக்கு எதிராக மாநில மொழியுரிமை வாளையும், தமிழின் தொன்மை மரபை உலகுக்கு உணர்த்தும் கீழடி கேடயத்தையும் ஏந்தி நிற்கிறார்.

எரிநெருப்பும், சிந்திய ரத்தமும் அதில் கலந்த மொழிப்போர் வீரர்களின் தியாகமும் நமக்கு உணர்த்தும் வரலாறுச் செய்தி ஒன்றுதான். “உரிமைப் போரில் உறங்குபவனுக்கு வாழ்வு கிடையாது” வரும் ஜனவரி 25ம் தேதியன்று, மொழிப்போர் தியாகிகள் தினத்தில் நாம் எடுக்கும் உறுதிமொழி நமக்குச் சடங்கான செயல் அல்ல. அது ஆதிக்கவாதிகளின் செவிகளுக்கு பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் வழியில் நாம் விடுக்கும் அறைகூவல்.

இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!

எங்கள் மொழி, எங்கள் அடையாளம் என்கிற முழக்கத்தோடு

வருகிற 25.01.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 0500 மணிக்கு கிருஷ்ணகிரி 5 ரோடு ரவுண்டானாவில்

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பாக, மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் ஜெய் என்கின்ற ஜெயேந்திரன் அவர்களது தலைமையில்

மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் வகையில் பிரம்மாண்ட பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த பொதுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி அவர்களும்,

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் எம்எல்ஏ , தலைமை கழக பேச்சாளர்கள் ஆலந்தூர் மலர்மன்னன் மற்றும் பவித்ரா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளனர்கள்.

அதேபோல் 25.01.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 0500 மணிக்கு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஓசூர், ராம் நகரில்

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பாக, மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் கண்ணன் அவர்களது தலைமையில்

மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் வகையில் பிரம்மாண்ட பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.


இந்த பொதுக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் எஸ்.கே.பி.கருணாநிதி அவர்களும், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஓய். பிரகாஷ் எம்எல்ஏ , தலைமை கழக பேச்சாளர்கள் மாரியப்பன் கென்னடி, லயோலா ராஜசேகர், இளம் பேச்சாளர் பவன்யா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளனர்கள்.

அதுசமயம் கிருஷ்ணகிரி கிழக்கு , மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், முன்னாள் சட்டமன்ற , நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, மாநகர, பேரூர், பகுதி கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள் , துணைத் தலைவர்கள் , அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் அறிவிப்பு!



நாகை, ஜன.23 -


நாகை மாவட்ட திமுக செயற்குழு கூட்டம். நாகையில் உள்ள மாவட்ட கழக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் இன்று (23.1.2026) மாலை 4.00 மணிக்கு மாவட்ட கழக அவைத் தலைவர் ப. செல்வம் தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவும்.

1, டெல்டா மண்டல மகளிர் மாநாடு,

2. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் கேட்டுக் கொண்டுள்ளார்.



திருவாரூர் மாவட்ட த.வெ.க. கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம்.தமிழ்செல்வி தமது ஆதரவாளர்களுடன் மாவட்டக் கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தார். திருத்துறைப்பூண்டி ஒன்றிய கழக செயலாளர் ப.பிரகாஷ் உடன் இருந்தார்.



புதுக்கோட்டை வடக்கு மாநகர சார்பில் புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் புதுக்கோட்டை வடக்கு மாநகர பொறுப்பாளர் எம்.லியாகத் அலி ஏற்பாட்டில் தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளைஞரணி செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் தை திருநாள் திராவிட பொங்கல் விழாவை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி புதுக்கோட்டை தடிகொண்ட அய்யனார் திடலில் நடைபெற்றது. நிகழ்வில் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், சுப.சரவணன், ராஜேஸ் ஆகியோர் கலந்துகொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசு தொகை மற்றும் வெற்றி கோப்பைகளை வழங்கினார்கள். மேலும் நிகழ்வில் புதுக்கோட்டை வடக்கு மாநகர அவைத்தலைவர் அ.ரத்தினம், துணைச் செயலாளர் மா.மணிவேலன் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா ஏ.வி. சுப்பிரமணியன்

### சனவரி 23 (2014)



தஞ்சை மண்டலத்தில் கழகம் வளர்க்கப் பாடுபட்டவர். மதுக்கூர் ஒன்றியச் செயலாளராக 27 ஆண்டுகள் பணியாற்றி, ஏராளமான கழகத் தோழர்களுக்கு தோன்றாத் துணையாய் நின்று பாடுபட்டவர்.

11வது கழக அமைப்புத் தேர்தலில் தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றியவர். பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் இருந்தவர்.

ஆலத்தூர் ஊராட்சித் தலைவராகவும், மதுக்கூர் ஒன்றியப் பெருந்தலைவராக இரண்டு முறையும், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர்.

‘மிசா’ சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்ததுடன், கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.